Registered as a Newspaper
விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM . மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி –13 | 30–08–2003 | சனிக்கிழமை | ஓசை 193

ASIAN COMPUTER CENTER
வரையப்புதிய கற்கை நெறியை 01.09.2003 திங்கள் பிற்பகல் 4 மணி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
DIPLOMA IN MS OFFICE
பயிற்சி முடிவில் மேற்படி நிறுவனத்தின் அங்கீகாரத்தின்படி சான்றிதழ் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:–
செ. சஞ்சீவன்,
2ம் வட்டாரம்,
துர்க்கா வீதி, புதுக்குடியிருப்பு.
(சீ–8264)

# காணி, சட்டம் ஒழுங்கு பேணல் தொடர்பான

# அதிகாரமற்ற சபை அர்த்தமுள்ளதாக இராது

## சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**காணி தொடர்பான அதிகாரம், சட்டம், ஒழுங்கைப் பேணு வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான அதிகாரங்கள் அவசியமானவை என சட்டவல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவ்வாறு அமையாதது அர்த்தபூர்வமான ஒரு சபையாக செயற்படுவதற்கு வாய்ப்பளிக்காது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர் என அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் நேற்று ஈழநாதம் நாளேட்டுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;

□ விடுதலைப் புலிகளால் இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கும் இடைக்கால நிர்வாக சபை வரைவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கின்றதா?

சட்டவல்லுநர்களின் ஆலோசனையைப் பெற்று சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு இன்று மக்களுக்குத் தேவையாக உள்ள புனர்நிர்மாண கட்டுமானங்களைச் செயற்படுத்தக் கூடிய அதிகாரத்தைக் கொண்ட ஒரு வரைவை நாம் தயாரித்துள்ளோம். ஏற்கனவே மக்களின் அவசர புனர்நிர்மாணத்திற்காக அமைக்கப்பட்ட 'சிரான்' அதிகாரமின்றி செயலிழந்து போனது தெரிந்ததே. இந்நிலையில்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு விபரங்கள் நிதித்துறை அறிவிப்பு

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்பிற்கு தெரிவு செய்யப்பட்டோருக்கு எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை மீளளிப்பு செய்யப்படவுள்ளதாக நிதித்துறை அறிவித்துள்ளது. இது தொடர்பான விபரங்களை நிதித்துறை வெளியிட்டுள்ளது. விபரம் 8ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. கடன் சான்றிதழைத் தவறவிட்டோர் மீளளிப்புப் பட்டியலில் தமது பெயர் உள்ளதா என அறிந்துகொள்வதற்கான திகதி விபரம் நாளை வெளியிடப்படும்.

## சிறிலங்கா அரசு நிராகரிக்க முடியாத வகையில் இடைக்கால நிர்வாக திட்ட வரைவு உள்ளது

### - மூத்த தளபதி கேணல் கருணா

சிறிலங்கா அரசு நிராகரிக்க முடியாத வகையில் இடைக்கால நிர்வாக திட்ட வரைவு உருவாக்கப்பட்டிருப்பதாக மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாக திட்ட வரைவு மற்றும் தற்போதைய கிழக்கு மாகாண நிலவரம் தொடர்பாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரான்சில் நடைபெற்ற தமது உள்ளகக் கூட்டம் மிகச் சிறப்பாகவும், பயனுள்ளதாக அமைந்திருந்ததாகவும் கூறிய அவர் இடைக்கால நிர்வாக வரைவு தொடர்பாக கூறும்போது,

இது ஒரு பதில் வரைவு என்று கூறுவதைவிட இது ஒரு தமிழ் மக்களின் வரைவாகத்தான் நாம் கருதுகின்றோம்.

யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு ஆறு கட்ட பேச்சுக்கள் நடந்து பல எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இன்று தமிழ மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்களுக்கு கிடைத்ததெல்லாம் ஏமாற்றமே.

ஆகவே இவ்வாறான தளம்பல் சூழ நிலையில் யுத்த நிறுத்தம் தொடருமா அல்லது மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமா என்று நினைத்துக் கொண்டிருந்த இக்கால கட்டத்தில் தீர்வு தொடர்பாக இன்று ஆரா

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவி வழங்குவதைத் தடுக்கும் அமெரிக்க சட்டத்தை எதிர்த்து வழக்கு

(வாஷிங்டன்)

விடுதலைப்புலிகளுக்கு உதவிகள் செய்வதைத் தடுக்கும் அமெரிக்க சட்டத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ் அமைப்புக்களும், சட்ட அமைப்புக்களும் சேர்ந்து தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் மற்றும் அமெரிக்க அரசின் தலைமை வழக்கறிஞர் ஆகியோர் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனவே இந்த மனு தாக்கல் தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞனை நிர்வாணமாக நிறுத்தி பொலிசார் கடுமையாகத் தாக்கினர்

### யாழ். மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

நிர்வாணமாக நிறுத்தி தனது தம்பியை கொடூரமான முறையில் பொலிசார் தாக்கியுள்ளதாக அவரது மூத்த சகோதரர் யாழ் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார். சிறுகுற்றம் ஒன்றிற்காக கடந்த 27ஆம் திகதி யாழ். பரமேஸ்வரா சந்திக்கு அருகில் உள்ள கடை ஒன்றில் வேலை செய்யும் தனது தம்பியை பொலிசார் பரமேஸ்ரா சந்தியில் வைத்து கைது செய்ததாகவும் பின் யாழ்பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று அவரது ஆடைகளைக் களைந்து நிர்வாணமாக நிறுத்தி மிகக் கொடூரமான முறையில் தாக்கியதுடன் எவருக்கும் இது தொடர்பாக முறையிடக்கூடாது

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான நடவடிக்கைகளுக்கு பின்லாந்தை ஏற்பாட்டாளராக நியமிப்பது குறித்து ஜே.வி.பி. ஆராயும்

(கொழும்பு)

நோர்வே ஏற்பாட்டாளரை சமாதான நடவடிக்கைகளிலிருந்து அகற்றி பின்லாந்து ஏற்பாடாளரை இதில் என்ன அடிப்படையில் ஈடுபடுத்துவது என்பது குறித்து இன்று கூடவுள்ள ஜே.வி.பி.யின் மத்திய குழு ஆராயவுள்ளதாகத் தெரிய வருகிறது. கடந்த திங்களன்று பொதுசன ஐக்கிய முன்னணியுடனான சந்திப்பின்போது சனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் நோர்வேக்கு பதிலாக பின்லாந்தின் முன்னாள் சனாதிபதியை ஏற்பாட்டாளராக நியமிக்கப்படலாம் என கருத்துத் தெரிவித்திருந்தார் இதனடிப்படையில் பின்லாந்து ஏற்பாட்டாளரை நியமிக்க ஜே.வி.பி. கோரியிருந்தது. அண்மையில் கொழும்புக்கு வருகை தந்த பின்லாந்தின் முன்னாள் சனாதிபதியும் இந்த ஏற்பாட்டிற்கு சம்மதம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே குடியிருப்புக்களில் முகாமிட்டுள்ள படையினரை வெளியேற்ற வழக்கு

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டில் படைத்தரப்பால் அதியுயர் பாதுகாப்பு வலயம் என பிரகடனப் படுத்தப்பட்ட பகுதிகளுக்கு வெளியே மக்கள் குடியிருப்புக்களில் நிலைகொண்டுள்ள படையினரை வெளியேற்றி மீளக் குடியமர அனுமதிக்கக் கோரும் வழக்கொன்று கொழும்பு உயர் நீதிமன்றில் அடுத்துவரும் சில தினங்களில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

1996 ஆம் ஆண்டு யாழ்குடா நாடு படையினரால் முழுமையாக கைப்பற்றப்பட்டதையடுத்து பரவலாக மக்கள் குடியிருப்புக்களிடையே புதிய முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. இம்முகாம்களுக்கென ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் குடியிருப்புக்கள் படையினரால் ஆக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய ஐவர்குழு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்களின் செயற்பாடுகளை மீளாய்வு செய்யவென அமைச்சர் மிலிந்த மொறகொட தலைமையில் ஐவரைக்கொண்ட குழுவொன்றை சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளதையடுத்து அமைச்சர்கள் சிலர் பலத்த அதிருப்தியடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இக்குழுவுக்குச் செயலாளராக நிதி அமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த நியமிக்கப்பட்டிருப்பதை அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க கடுமையாக எதிர்ப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அமைச்சர்கள் கரு ஜெயசூரிய டிரோன்பர்னாண்டோ ஆகியோரும் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதேவேளை எதிர்வரும் நவம்பர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தூதுவர் இன்று வருகை

அமெரிக்காவின் சிறிலங்கா விற்கான புதிய தூதுவர் கலாநிதி ஜெப்ரி ஜோன்இன்றுசிறிலங்காவருகின்றார். முன்னர் சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதுவராக கடமையாற்றிய அஸ்லி வில்ஸ் இடமாற்றம்பெற்றுச்சென்றுள்ளதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.இராஜதந்திர சேவையில் 26வருடங்கள் அனுபவம் பெற்றுள்ள ஜெப்ரிஜோன் ஏற்கனவே பாகிஸ்த்தான், இந்தியா, பங்களாதேஷ், மலேசியா ஆகிய நாடுகளில் தூதுவராக கடமையாற்றியுள்ளார்.

## யாழ். இலுப்பையடிச்சந்தியில் குடியிருப்பாளரை பாதுகாப்பு அமைச்சு பெயரளவில் அனுமதி குடியமர விட படையினர் மறுப்பு

குடியேறுமாறு கண்துடைப்புக்காக அனுமதித்த படையினர் தம்மை அங்கு நிம்மதியாக குடியமர முடியாது நடைமுறைக்கு பொருத்தமற்ற அறிவுறுத்தல்களைப் பிறப்பித்துள்ளதாக காணிகளின் உரிமையாளர்கள் இலங்கை மனிதஉரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் முறைப்பாடொன்றினை செய்துள்ளனர். நாவலர் வீதியில் இலுப்பையடிச் சந்திக்கு அருகாமையில் உள்ள 2 1/2 பரப்பைக் கொண்ட காணியில் 1995 ஆம் ஆண்டில் இருந்து மினிமுகாம் ஒன்றை அமைத்து தங்கியிருக்கும் படையினர் அங்கிருந்து அதனை அகற்றி தம்மை மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி பாது

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### அறிவமுது புத்தகசாலையில்

மட்டக்களப்பு தமிழ் அலை வார இதழ் கொண்டல் பெண்கள் பத்திரிகை வீரகேசரி, தினக்குரல் சகல ஆங்கில பத்திரிகையும் வியாபாரிகள் சிறப்புக் கழிவுடன் பெற அறிவமுது பொத்தகசாலை (சி-8479)

### ராகு, கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

15-08-2003இல் ராகு,கேது மாற்றமும் வியாழ மாற்றமும் ஜீவன் - பிரம்மம்ஐக்கிய வேதாந்த ரகசியமும் அடங்கியவை. ரூ. 15/= எங்கும் விற்பனையாகின்றது. கணிப்பாசிரியர் - சத்யா, ருக்மணி புத்தகசாலை, புதுக்குடியிருப்பு. (சி-7782)


## 12 ஆண்டுகளின் பின் திருவிழா

பூநகரி வலம்புரி இராணுவ நடவடிக்கையின்பின் முதன் முதலாக மண்ணித்தலை செபஸ்தியார் கோயில் திருவிழா இவ்வாண்டு வெகு விமரிசையாக நடைபெற்றது.கடந்த24-ம் திகதி இத் திருவிழாநடைபெற்றுள்ளது. (34)

## நாய்களுக்கான தடுப்பூசி

கடந்த செவ்வாய்க்கிழமை பூநகரி பள்ளிக்குடா கிராமசேவகர் பிரிவில் நாய்களுக்கான தடுப்பூசி சுகாதாரப்பிரிவினரால் ஏற்றப்பட்டது. இங்கு நூற்றுக்கணக்கான நாய்களிற்கு ஊசி ஏற்றப்பட்டன என்பது குறிப்பிடப்பட்டது. (34)

## பாம்புக்கடி

பூநகரியில்கடந்த சில தினங்களாக மீளக்குடியமர்வில் ஈடுபட்டுள்ள மக்கள் பாம்புக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.வினாசி ஓடையில் பொன்னம்பலம் மதியழகன் கல்முனையில் செல்லப்பாகந்தசாமி என்பவர்கள் பாம்புக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். (34)


### இலவச கணினி செயலமர்வு

இடம்:- NITM கணினி பயிற்சி நிலையம் புதுக்குடியிருப்பு

காலம்:- 01.09.2003 - 05.09.2003

நேரம்:- மாலை 3.00 - 6.00வரை

**பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்.**

(3490)


# யுத்தத்தின் வளர்ச்சியில் கல்வியுலகில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன

## கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம்

ஏறத்தாழ பத்து வருடங்களுக்கு முன் நாட்டிலே கல்வித் திணைக்களத்தினர் மட்டும் கல்வியை வளம் படுத்துவார்கள் என்ற ஒழுங்கு இருந்தது. யுத்தத்தின் பரிணாம வளர்ச்சியில் கல்வியுலகிலே பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கல் வியை வளர்ப்பது கல்வித் திணைக்களங்கள் என்றல்லாது திணைக்கள சட்டங்களுக்கு அப்பால் சமுதாய முன்னேற்றம், சமூகப் பங்களிப்பு, கடந்த பத்து வருடமாக எமது தாயக தேசத்தில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது, சமூகத்தொண்டு, நிறுவனங்களின் பங்களிப்பு, இவற் றின் பங்களிப்புக்கள் கிடைக்காமல் இருந்திருப்பின் இன்று கல்வி வாய்ப்பைப் பெற்றுக்கொண்டுள்ள பலமாணவர்களில் பலர்தமது கல்வியை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இந்நிலையில், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டமைப்பாக செயற்படும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் முன்னெடுக்கப்படும் கல்விச் செயற்பாட்டின் ஆரம்பப் படிநிலையாகிய முன்பள்ளி கல்வி முக்கியமான தொன்றாக அமைந்துள்ளது என கடந்த புதனன்று கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முன்பள்ளி ஆசிரியர்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்கள் தெரிவித்துள்ளார்.மேற்படி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் மா.ஜெறாட் தலைமையில் நடைபெற்றது.

முதன்மைச் சுடரினை தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். இனியவன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், கிளி., முல்லை. மறைக் கோட்ட குரு முதல்வர் அருட்திரு. தேவசகாயம் அடிகளார், வேள்ட்விசன் நிறுவனக் கணக்காளர் லீனஸ் ஆகியோர் ஏற்றிவைத்தார்கள்.

தமிழீழத் தேசியக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரியும், தமிழர் புனர்வாழ்வுக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் சிவஞானசுந்தரமும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டுக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் செல்வியோ. நிலா ஆகியோரும் ஏற்றி வைத்தனர்.

ஆசியுரையினை கிளி., முல்லை. மறைக்கோட்டகுருமுதல்வர் அருட்தந்தை தேவசகாயம் அடிகளாரும், சிறப்புரையினை தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், வேள்ட்விசன் நிறுவன திட்ட இணைப்பாளர்,சர்வோதய நிறுவன முன்பள்ளி ஆலோசகர் ஆகியோரும் ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் 60 முன்பள்ளி ஆசிரியர்களுடன் அரச, சர்வதேச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.


An international non - government Organization engaged in economic & social Development Program

## CARE INTERNATIONAL SEEKS THE SERVICES of FOLLOWING POSITIONS FOR THE WANNI DEVELOPMENT PROJECT

CARE INTERNATIONAL in sri lanka, a leading international Non Governmental Organization is actively involved in economic empowerment and confronting issues of social marginalization. we have an island wide network and currently manage several projects towards this objective.

*the wanni development projects objective is to improve the living conditions for vulnerable IDPs, returnees and vulnerable local households in the conflict -affected areas. To improve the ability of the local civil society and organizations to implement community-oriented interventions that will assist in reducing vulnerability and distress, improving household food production and household income.*

### 1. project Officer- Capacity Building

The selected candidate will assist partner organizations in developing their technical and organizational standards to ensure the sustainability of the organizations. S/HE will also be responsible for liaising with local authorities to promote the project in the wanni Region.

Graduates/ Diploma holders in social seience with a minimum of three years experience in Capacity Building activities are encouraged to apply. preference will be given to candidates with strong interpersonal, statistical analysis and report writing skills.

### 2. secretary

Selected candiDate will be responsible for providing Secretarial, Office Management and logistical/ financial service surpport to project staff. will also contribute to budget preparation, expenditure monitoring and assisting the staff in budgeting and preparation of financial reports. A positive attitude to hard work and ability to handle a multiplicity of tasks is an advantage.

G.C. E. (A\ L) in four subjects with experience in office management or secretarial studies or with releveant qualifications in finance together with computer literacy and minimum of 2 years experience.are encouraged to apply.

### GENERAL :-

1) Salaries and fringe benefits are competitive, and commensurate with qualifications and experience.
2) Selected candidate will be on contract basis.
3) This position is based in Puthukkudiruppu.

Please send CV (with contact telephone numbers) and namesof two non-related referees within seven days of this advertisement.

All applications will be treated in strict confidence. We thank all applicants, but only individuals who are hort - listed will be contacted. Applications may be hand delivered to our office in Puthukkudiruppu.

**Women are encouraged to apply.**

Director Human Resources
CARE INTERNATIONAL - SRILANKA,
7/A, Gregory's Road,
Colombo 7.

(சி-7783)


# வன்னிப் புனர்வாழ்வு அமைச்சின் செயற்திட்ட மீளாய்வுக்கருத்தரங்கு

வன்னிப் புனர்வாழ்வளிப்புக்குத் துணைபுரியும் அமைச்சின் 2003ம் ஆண்டிற்கான செயற்படுதிட்ட மீளாய்வுக் கலந்துரையாடல் ஒன்று வன்னிப் புனர்வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சுச் செயலாளரின் அனுசரணையும் முல்லை மாவட்ட அரசஅதிபர் தலைமையில் கடந்த 27 ஆம் திகதி அன்று கச்சேரி முல்லைத்தீவு மாநாட்டு மண்டபத்திலும் 28ஆம்திகதி துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலும் நடைபெற்றது.

இதில் கணினி கற்கை நிலையங்கள், பால்சேகரிப்பு நிலையம் ஆகியவற்றின் செயற்பாடுகள் முன்னேற்றம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. இவற்றிற்கான நிதியுதவியினை வன்னிப் புனர் வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சே வழங்குகின்றது. (20)

# ஆழியவளை உபதபாலலுவலகம் சொந்த இடத்தில் ஆரம்பம்

வடமராட்சிக்கிழக்கு ஆழியவளை உபதபால் அலுவலகம் அதன் சொந்த இடத்தில் கடந்த புதன் கிழமை முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. அன்று முற்பகல் 11. மணியளவில் வடமராட்சி கிழக்கு புனரமைப்புக் குழுத் தலைவர் சி. பொன்னம்பலம் தலைமையில் ஆரம்பமான இத்திறப்புவிழா நிகழ்வில் மங்கல விளக்கினை பச்சிலைப்பள்ளிப் பிரதேச உதவி அரசாங்கஅதிபர் புத்திசிகாமணியும், வடமராட்சி வலய கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகனும், ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனைப் பொறுப்பாளர் செல்வி ஈழவாணியும் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை வடமராட்சிக் கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை மக்கள் தொடர்பாளர் யாழ்மன்னன் ஏற்றிவைத்தார்.

உபதபால் அலுவலகத்தின் பெயர்ப்பலகையினை வடமராட்சிக் கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப. வேலாயுதம்பிள்ளை திரைநீக்கம் செய்து வைக்க, உபதபால் அலுவகலகத்தினை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் அஞ்சல் அத்தியட்சகர் வீ. குமரகுரு நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து தலைமையுரையும், சிறப்புரையும் இடம்பெற்றன. (34)

# பூநகரிப் பிரதேசத்தில் மக்கள் சந்திப்பு நிகழ்வு

(பூநக்ரி)

கடந்த 22ஆந் திகதி பள்ளிக்குடா கிராம சேவகர் பிரிவிலும் 23 ஆந் திகதி கௌதாரிமுனை கிராம சேவகர் பிரிவிலும் மக்கள் சந்திப்பு இடம் பெற்றது.

இம் மக்கள் சந்திப்பில் கடற்புலிகளின் மன்னார் மாவட்டத்தளபதி லக்ஷ்மன்,மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ம. குகன், பூநகரி கடற்புலிப் பிரதேசப் பொறுப்பாளர்வேங்கைத்தமிழன் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலைப்பாடு சம்பந்தமாகவும் மாவீரர், போராளி குடும்பங்களின் நலன் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்பட்டது. இச்சந்திப்பில் பொதுமக்களும் கடற்றொழில் சங்கத்தினரும் கிராம சேவையாளரும் கலந்து கொண்டனர்.(34)

# ஊரக தேசிய எழுச்சிப்பேரவை புத்துவெட்டுவானில் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

துணுக்காய்ப் பிரதேசத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைத் தெரிவு புத்துவெட்டுவான் கிராம சேவையாளர் பிரிவில் இடம் பேற்றுள்ளது.

மேற்படி தெரிவு கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மேஜர் மங்கை முன்பள்ளி மண்டபத்தில் கிராம சேவையாளர் ச. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தொடர்பான கருத்துரைகளை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. சேரன், அரசியல் துறையைச் சேர்ந்த பெ. தனம் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து ஊரக எழுச்சிப் பேரவைத் தெரிவு இடம்பெற்றது.

# பகையுணர்வுடனான பார்வையை நிறுத்தினாலே அணுவாயுதத் திட்டத்தை முடக்குவோம்

## - வடகொரியா அமெரிக்காவிற்கு நிபந்தனை

**தமது நாட்டை பகையுணர்வுடன் நோக்கும் பார்வையை அமெரிக்கா நிறுத்திக் கொண்டால் மாத்திரமே அணுவாயுதத் திட்டத்தை முடக்கிக் கொள்ளப் போவதாக வடகொரிய பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

பேச்சுவார்த்தைகளில் வடகொரியா அமெரிக்காவிற்கான நிபந்தனைகளின் பட்டியல் ஒன்றை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரிய நெருக்கடிகளைத் தீர்க்கும் பேச்சுவார்த்தைகளில் வேறுபாடுகள் இருந்தாலும் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாக சீனா அறிவித்துள்ளது.

பீஜிங் நகரில் மூன்று நாட்களாக தொடர்ந்த பேச்சுவார்த்தைகளின் முடிவில் அனைத்து தரப்பினரும் அது பயன்பெறுவதாக இருந்ததென சீனப் பேச்சாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்பேச்சுக்களில் வடகொரியா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், தென்கொரியா, ரஷ்யா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

தென்கொரிய தூதுக்குழுவின் தலைவர் கருத்துத்தெரிவிக்கையில், அனைத்து தரப்பினரும் எதிர்காலத்திலும் பேச்சுவார்த்தைகளை நடத்த இணங்கியதாக அறிவித்துள்ளார். இராஜதந்திர பணிமனைகளின் ஊடாக பேச்சுக்கான இடமும் திகதியும் தீர்மானிக்கப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

வடகொரியா அணுவாயுதங்களை வடிவமைத்துத் தருவதாக அமெரிக்கா முன்வைத்த குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எழுந்த சர்ச்சையைத் தீர்ப்பதற்காகவே இப்பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காசாவில் விமானத்தாக்குதல் ஒருவர் பலி; மூவர் காயம்

(ஜெருசலேம்)

காசா முனையில் இஸ்ரேலிய யுத்த விமானம் நேற்று முன்தினம் நடத்திய தாக்குதலில் கமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

இஸ்ரேலிய இராணுவம் தகவல் தெரிவிக்கையில், இஸ்ரேல் மீது மேற்கொள்ளப்பட்ட ரொக்கெட் தாக்குதல்களின் பின்னணியில் இவர் இருந்ததாக அறிவித்துள்ளது.

வொஷிங்டனில் அமெரிக்க வெளிவிவகார திணைக்களம் தகவல் தருகையில், மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இரு தரப்பினரும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டுமென கூறியுள்ளது. இங்கு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் இரு தரப்பினரும் முக்கியமாக பங்கேற்க வேண்டியிருந்த போதிலும் தாக்குதல்களும் வன்செயல்களும் இடம்பெறுவது கவலைக்குரிய விடயமாகுமென கூறியுள்ளது.



ஈராக் யுத்தம் தொடர்பாக அமெரிக்காவிற்கு ஆதரவு வழங்கிவரும் கொஸ்ராறிகா அரசிற்கெதிராக அந்த நாட்டு மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டத்தையும் இதை அடக்க முற்படும் கொஸ்ராறிகா பொலிசாரும்.

# தொலைத் தொடர்பு துறையில் ஒத்துழைப்பு அவுஸ்திரேலியா - இந்தியா உடன்பாடு

(புதுடில்லி)

தொலைத் தொடர்பு முறையில் இரு தரப்பு ஒத்துழைப்பிற்கான ஒப்பந்தம் ஒன்றில் இந்தியாவும், அவுஸ்திரேலியாவும் நேற்று கையெழுத்திட்டுள்ளது.

மெல்போனில் நடைபெற்ற நிகழ்வில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்காவும், அவுஸ்திரேலியா தொலைத் தொடர்புத் துறை அமைச்சரும் இவ் உடன்படிக்கையில் கையெழுத்திட்டுள்ளனர்.

இதனிடையே அவுஸ்திரேலியாவிலுள்ள இந்தியர்கள் மத்தியில் நேற்று முன்தினமிரவு ஜஸ்வந்சிங்கா பேசுகையில், அவர்களது கோரிக்கையை ஏற்று முழுமையான இந்தியத் துணைத் தூதரகம் மெல்போனில் விரைவில் திறக்கப்படுமென அவர் கூறியுள்ளார். இந்தியாவிற்கும், அவுஸ்திரேலியாவிற்குமிடையே நட்புறவு பாலமாக அங்குள்ள இந்தியர்கள் செயற்பட்டு வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவுடனான இந்திய உறவுகளில் புதிய அத்தியாயம் தொடங்க விருப்பதாகக் கூறிய அவர் சமூக, பொருளாதார, கலாசாரத் துறைகளில் இரு நாடுகளுக்கு மிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருந்து வருவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# "இம்சாட் 3 ஈ" விரைவில் விண்ணில் செலுத்தப்படும்

## - இந்தியா அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் அடுத்த தலைமுறைக்கான தகவல் தொடர்பு செயற்கைக்கோளான "இம்சாட் 3 ஈ" அடுத்தமாத இறுதியில் அல்லது அக்ரோபர் மாதம் விண்ணில் செலுத்தப்படுமென இந்திய விண்வெளி ஆய்வுக்கழகமான எஸ்ரோவின் தலைவர் கஸ்தூரி ரங்கன் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் செயற்கைக்கோளில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியிருப்பதால் செயற் கைக்கோளை ஏவுவதற்கு தாமதமாகிறதென அவர் கூறியுள்ளார்.

# முலாயம்சிங்யாதேவ் நேற்று பதவிப் பிரமாணம்

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் முதலமைச்சராக முலாயம் சிங்யாதேவ் நேற்று பதவியேற்றுள்ளார்.

லக்னோவில் கோமதி ஆற்றங்கரையில் லக்சுமி நீலா மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஆளுநர் விஸ்ணுகாந் சாஸ்திரி புதிய முதல்வருக்கு பதவிப் பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் செய்து வைத்துள்ளார்.

மூன்றாவது முறையாக உத்தரப் பிரதேச முதல்வராகப் பதவியேற்றுள்ள இவருடன் அமைச்சர்கள் எவரும் பதவியேற்கவில்லை. 14 நாட்களுக்குள் தமது அரசின் பெரும்பான்மையை மாநில சட்டப் பேரவையில் பதவியேற்றுள்ள முதலமைச்சர் நிரூபிக்கவேண்டுமென ஆளுநர் கூறியுள்ளார்.

# வீரப்பன் தமிழக வனப்பகுதிக்குள் கர்நாடக அதிரடிப்படை அறிவிப்பு

(சென்னை)


வீரப்பன் தமிழக வனப்பகுதிக்குள் நுழைந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளமையைத் தொடர்ந்து அதிரடிப்படையினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

கர்நாடக முன்னாள் அமைச்சர் நாகப்பா கொலை செய்யப்பட்ட பகுதியில் வீரப்பன் நடமாட்டம் இருப்பதாக கர்நாடக அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்தமையைத் தொடர்ந்து இத்தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. அவர்கள் நடத்திய விசாரணையில் சிம்மகல்லி வனப்பகுதியில் நாகவேல் என்பவரை வீரப்பனின் நண்பர்கள் சந்தித்துப் பேசியுள்ளமை தெரியவந்துள்ளதாக அதிரடிப்படை அதிகாரி கூறியுள்ளார்.


இதனால் வீரப்பன் கும்பல் அப்பகுதியிலிருந்து வெளியேறி தமிழக வனப்பகுதிக்குள் நுழைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். வீரப்பன் பற்றிய தகவல் தருபவர்களுக்கு ஐந்தரை கோடி ரூபா பரிசு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



பாங்கொக்கில் ஆசிய பசுபிக் பொருளாதார மாநாடு நடைபெறவுள்ள நான்கு மாடிக் கட்டடத்தில் விசேட கொமாண்டோ அணி பயிற்சியில் ஈடுபடுகின்றது.



ரஷ்யாவுடன் இந்தோனேசியா செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி கொள்வனவு செய்யப்பட்ட ரஷ்யத் தயாரிப்பான சுக்காய்-27 ரக ஜெட் யுத்த விமானங்களில் ஒன்று யாவா விமானப் படைத்தளத்தில் சரக்கு விமானம் ஒன்றிலிருந்து இறக்கப்படுகின்றது.



பீஜிங் வைத்தியசாலையில் 15 மாதக் குழந்தையின் 3வது காலை நீக்கும் சத்திர சிகிச்சையில் ஈடுபட்டுள்ள வைத்தியர் குழு.


# பாலம் இடிந்து வீழ்ந்ததில் இந். டமானில் 26 பேர் பலி

(புதுடில்லி)

பேர்ந்துகீர்ந்தரசான இந்தியாவில் டமான் யூனியன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பாலம் இடிந்து வீழ்ந்ததில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் பலர் பாடசாலை மாணவர்கள்.

கடும் மழை காரணமாகவே இப்பாலம் இடிந்து வீழ்ந்துள்ளது. இதில் நடந்து சென்று கொண்டிருந்த பலரும் பயணம் செய்த 10 வாகனங்களும் டமான் கங்கா நதியினுள் மூழ்கியுள்ளன.

நதியில் மூழ்கி இறந்தவர்களின் சடலங்களையும் வாகனங்களையும் மீட்கும் பணி தொடர்ந்து இடம் பெற்று வருகிறது.



# அதிர்வுகளைத் தாங்கும் விண்வெளி வீரரின் ஆடை

விண்கலத்தைத் தாங்கிய ரொக்கட் பூமியில் இருந்து புறப்படும் போதும், விண்கலம் பூமிக்குத் திரும்பும்போதும் அதிகூடுதலான அதிர்வுகளுக்கு உட்படும். அப்போது காற்று வெளியேறாவண்ணம் மிகவும் இறுக்கமாக



மூடப்பட்டுள்ள கதவுகள் கூட தளர்வடையக்கூடும். இவ்வாறு நிகழுமாயின் விண்கலத்தில் உள்ள காற்று சடுதியாக வெளியேறும். இதனால் விண்வெளிவீரர்கள் மரணமடையநேரிடும்.

இதனை நிவர்த்தி செய்வதற்காக விசேட விண்வெளி ஆடைகளை வீரர்கள் அணிவர்.

விண்கலம் பூமியில் இருந்து புறப்படும் போதும், பூமிக்குத் திரும்பும் போதும் விண்கலத்தில் இருந்து விண்வெளியினுள் பிரவேசிக்கும் போதும் விசேட ஆடைகளை அணிவர். விண்கலத்தினுள் சாதாரண ஆடைகளை அணிவர்.

விண்வெளி ஆடைகளினுள்ளே தண்ணீர் உட்புகமுடியாது. இவ்வாடைகளைத் தைப்பதற்கு பயன்படுத்தப்படும் துணி தீப்பற்ற முடியாத செயற்கை நார்களால் ஆனது. இவ்வாடைகள் இரண்டு அடுக்குகளாக இருக்கும். உள்அடுக்கு ரப்பர் போன்ற தடித்த துணியினால் ஆனது. இதனூடாக காற்றுப் புகாது. உள் அடுக்கிற்கு பாதுகாப்பாக வெளி அடுக்கு இருக்கும். இவ் ஆடையானது எளிதில் துளை படமுடியாதவாறு உறுதியானது. இவ்வாடையானது 15 தொடக்கம் 25 கிலோகிராம் வரை நிறையுடையது.

இவ்வாடையை வயிற்றுப் புறமாகத் திறக்கலாம். அத்துவாரத்தின் ஊடாக இருகால்களையும் முதலில் செலுத்தி பின் கைகளை ஆடையினுள் செலுத்தவேண்டும். பின் புகுந்துகொண்ட துவாரத்தினை காற்றுப் புகாதவாறு அடைக்க வேண்டும். பின் ஆடையுடன் இளைக்கப்பட்ட தலைக்கவசமும் கையுறைகளையும் அணிய வேண்டும்.

ஆடையை அணிந்த பின் ரயருக்குக் காற்று அடிப்பது போல் காற்று உட்செலுத்தப்படும். இந்நிலையில், ஊதிய பலூனைப் போன்று காட்சி தரும். இதன்பின் ஆடையின் நெஞ்சுப் பகுதியில் அமைந்துள்ள வாயு அமுக்க அளவீடு கட்டுப்பாட்டு கருவி மூலம் அமுக்கத்தை வீரர்கள் சரிசெய்வர்.

இவ் ஆடையானது அணிவதற்கும், நடப்பதற்கும் பல அசௌகரியங்களைக் கொடுப்பதாலும் விண்வெளிவீரர்களின் உயிரைக் காக்கின்றது. —— சி.ஜெயரூபி

# பாலைவனத் தவளைகள் உயிர்வாழ்வது எப்படி

பாலைவனத்தில் தவளைகள், தேரைகள் வாழ்கின்றன என்பதை நம்பமுடியாதுதான். ஆனால் அங்கு தவளைகளும், தேரைகளும் வாழ்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ளார்கள். வரண்ட சூழலுக்கேற்ப இவை தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதால் மட்டுமேதான் வாழ முடிகின்றது. வடஅமெரிக்க பாலைவனத்தில் வாழும் தவளைகள், தேரைகளை மண்வெட்டி தவளை, மண்வெட்டி தேரை என்று அழைக்கப்படுகின்றது.

இவை வரட்சிநிலவும் ஒன்பது,பத்து மாதங்களும் வளைக்குள்ளேயே பதுங்கிக் கிடக்கின்றன. இந்த நீண்ட உறக்கம் அதன் உடம்பில் இருக்கும் ஈரப்பசையைப் பாதுகாக்க இந்த உறக்கம் உதவுவதாகக் கூறப்படுகின்றது. பாலைவனத்தில் கனமழை பெய்யும்போது இவை வளையைவிட்டு வெளியே வருகின்றன. அவுஸ்திரேலியப் பாலைவனத்தில் வசிக்கும் தவளைகள் நீண்ட வரட்சிகாலம் முழுவதும் நிலத்தடிக்குகை அமைத்து அங்கு வாழ்கின்றன.

மழைகாலம் தொடங்கியதும் அது நிலத்தடிக்குகையை விட்டு வெளியே வந்து குளம், குட்டைகளை நோக்கி குதித்தோடும்.

மழையில் குஞ்சுபொரிக்கும். பூச்சி, புழுக்களை உணவாக வெறிகொண்டு உண்ணும்.

அதன் பின்னர், தனது உடலில் ஏராளமான தண்ணீரை உறிஞ்சி, மேல் தோலையே கண்ணாடித்தாள் மாதிரி ஆக்கிக்கொண்டு உறிஞ்சிய நீர் அனைத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்கின்றது.

குளம் குட்டைகள் மீண்டும் வறளும் போது தனது நிலத்தடிக்குகைக்கு மீண்டும் சென்று வாழ்கின்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளார்கள்.

# தெரிந்துகொள்ள....

➡ 10,000 தொன் எடை,324 மீற்றர் உயரம் கொண்ட உலகப் புகழ்பெற்ற பாரீஸ் நகரிலுள்ள ஈபிள் கோபுரத்தைக் கட்டியவர் கஸ்டவ் ஈ.பிள் என்பவர். இவர் பொறியியலாளர் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது.

➡ கனடாவில்தான் உலகின் மிக நீளமான வீதி இருக்கின்றது. ரொரண்டோ நகரில் ஆரம்பமாகும் இந்த வீதி 1900 கிலோமீற்றர் நீளம்வரை செல்கின்றது. இந்த வீதிக்குப் பெயர் 'எங்தெரு' ஆகும்.

➡ தண்ணீரில் மரங்கள் மிதக்கும். ஆனால் 'பாக்ஸ் உட்' எனும் மரம் தண்ணீரில் மூழ்கிவீடுகின்றது.

➡ சீனர்கள்தான் தேநீரை **TEA** என்ற பெயருடன் உலகிற்கு வழங்கியவர்கள்.

➡ அனைத்து அரபு நாடுகளிலும் அவசர பொலிஸ் தொலைபேசி எண் 999 ஆகும்.

➡ நியூயார்க்கிலுள்ள 'சென்ட்ரல் பார்க்' எனும் பூங்காதான் உலகின் மிகப் பெரிய பூங்கா ஆகும். 843 ஏக்கர் பரப்பளவு கொண்ட பூங்காவில் எல்லாவிதமான பொழுதுபோக்கு அம்சங்களும் உண்டு. அதிலொன்று ரிமோட் கண்ரோல் உதவியுடன் இயக்கி நடத்தப்படும் பொம்மைப் படகுப் போட்டி ஆகும்.

➡ தென் அமெரிக்க நாடான பராகுவேயில் உலோக நாணயங்களே கிடையாது. அனைத்தும் தாள் நாணயங்களே புளக்கத்தில் உள்ளன.

➡ காரில் இருந்தபடி படம் பார்க்கும் படியான 'டிரைவ் – இன் சினிமா'' திறந்தவெளி அரங்கம், நியூஜெர்சியில் காம்டென் எனுமிடத்தில் 06 – 06 – 1933 அன்று திறந்து வைக்கப்பட்டது. ஒரே சமயத்தில் 400 கார்கள் நிறுத்தும் படியான இடவசதி கொண்டதாக இருந்தது இந்த அரசாங்கம்.

➡ இந்தியா முழுவதும் 13 ஆயிரம் டன் எடையுள்ள தங்கம், தனிநபர் கோவில்களிலும்,சமயத் தொடர்பு உள்ளவர்களிடமும் உள்ளன. இதன் மதிப்பு ஆறு இலட்சம் கோடி ரூபாய் ஆகும்.


➡ ஜெர்மனியில் ஒற்றை உறுப்பினர் உள்ள குடும்பங்களே ( **One MemberFamily**) அதிகம். 134 இலட்சம் குடும்பங்கள் ஒற்றை உறுப்பினர்களெனக் கணக்கெடுப்பு ஒன்று கூறுகிறது.

# குளோனிங் முறையில் குதிரை

கடந்த மே மாதம் குளோனிங் முறையில் முதன் முதலில் குதிரை பிறந்துள்ளது. இத்தாலி நாட்டில்தான் இந்த குளோனிங் குதிரை உருவாக்கப்பட்டுள்ளது.

தாய்க்குதிரையின் ஷெல்லில் இருந்து இந்தக் குட்டிக்குதிரை உருவாக்கப்பட்டுள்ளது. புரமீடா என்று இந்தப் பெண் குட்டிக்குதிரைக்குப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தக் குட்டி பிறந்த போது 36 கிலோ எடைகொண்டதாக இருந்தது. தாயின் ஷெல்லில் இருந்து உருவாக்கப்பட்ட கரு தாயின் கருப்பையில் வைக்கப்பட்டு முழுமையான கர்ப்பகாலத்தின் பின்னர் சாதாரண பிரசவத்தில் தான் இந்தக் குட்டி பிறந்துள்ளது. படத்தில் இருப்பது தாயும் சேயுமான குதிரைகளே.




# கண்பார்வையற்றவரின் சாதனை

*கண்பார்வையிழந்த ஒருவர் விமானத்தையோட்டி ஆங்கில கால்வாயைக் கடந்து சாதனைபடைத்துள்ளார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கிளின்டனுக்கு(வயது-௬௰) கடந்த ௨௰ வருடங்களாகவே கண்பார்வையில்லை.*

*இந்நிலையில் இங்கிலாந்து,பிரான்ஸ் நாட்டினிடையே அமைந்துள்ள ஆங்கில கால்வாயை மைலேக் எனப்படும் பார்வையற்றவர்களுக்காகவே உருவாக்கப்பட்ட சிறியரக விமானம் மூலம் ஆங்கிலக்கால்வாயைக் கடந்து புதிய சாதனையைப் புரிந்துள்ளார்.*

# ஓவியர்களின் பார்வையில் பண்டைய எகிப்து

பண்டைய எகிப்தின்நாகரிக கலாசார செழுமைவெளி உலகுக்குத் தெரிய வந்தது. 1798இல் நெப்போலியன் எகிப்தின் மீது படையெடுத்த பின்னரே இதற்கு முன் ஐரோப்பிய ஓவியர்கள் விவிலியத்தை ஆதாரமாகக் கொண்ட ஓவியங்களையே தீட்டி வந்தனர். நெப்போலியன் எகிப்தை கைப்பற்றிய பின்னர் அங்கு சென்ற பிரெஞ்சு அறிஞர்களும், ஆய்வாளர்களும் எகிப்திய கலாசாரத்தை எழுத்தில் பதிவு செய்தனர். இதை பிரிட்டிஷ் விற்பன்னர்களும் பின்பற்றினர். இங்கே 19 ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்ட எகிப்திய ஓவியம் ஒன்றைத் தருகின்றோம்.



# ஹிமாலயன் கரடி

பர்மா இந்தோனேசியா, மஞ்சூரிய, கொரியா,யப்பான் ஆகிய இடங்களில ஹிமாலயன் எனப்படும் கறுப்பு நிறக் கரடியைக் காணமுடியும்.

கோடைக்காலங்களில் 12000 அடி உயரத்தில் கூட இது வசிக்கும். தனைப் பார்க்கவும் முடியும்.

இதனுடைய மூக்குப் பகுதி கூர்மையாக இருக்கும். இதனுடைய மார்புப் பகுதியில் ஆங்கில எழுத்து V போன்ற வடிவத்தில் வெள்ளைப் பட்டை காணப்படும். முகம்,வாய்ப் பகுதியும் வெள்ளையாகக் காணப்படும்.

இந்த ஹிமாலயன் கரடிக்கு தேன் தான் பிடித்த உணவு. தேனீ கொட்டினால் தரையில் புரளும், மரத்தில் உடலைத் தேய்த்துக் கொள்ளும்.

அத்துடன் காடுகளின் அடர்ந்த பகுதிகளில் வசிக்க மட்டுமே ஹிமாலயன் கரடிக்கு மிகுந்த விருப்பமாகும் என்று கூறப்படுகின்றது.

# மணம் வீசும் ஆடைகள்...

***இங்கிலாந்தில் சென்சரி தொழில்நுட்பம் என்ற நெசவுத் தொழில்நுட்பத்தில் சென்ட் தெளிக்காமலே மணம் வீசும் புதிய வகை ஆடைகளைத் தயாரிக்கின்றனர். உடல் துர்நாற்றங்களை மறைத்து நறுமணம் செய்வதற்கு சென்ட் தெளித்துக்கொள்கிறோம் அல்லவா? இங்கிலாந்தில் புதிய வகைத் துணிகளை தயாரிக்கின்றனர். இந்தத் துணிகளில் சென்ட் மணம் நூலிலையிலேயே சேர்க்கப்பட்டுவிடுகிறது. ஆடையை எத்தனை முறை துவைத்தாலும் அந்தத் துணிகள் அதே நறுமணத்தைத் தருகின்றன.***

# சிறி. சு.கட்சி — ஜே.வி.பி. கூட்டம் தீர்மானமின்றி முடிவடைந்தது

(கொழும்பு)

**ஜே.வி.பி.க்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பாக கடந்த புதனன்று சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பு எதுவித முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது.**

ஆளும் கட்சிக்கெதிராக செயற்பட கூட்டணி அமைக்கும் பேச்சுக்கள் புதன்கிழமை சுமார் மூன்று மணித்தியாலங்களாக இழுபறி நிலையில் நடைபெற்ற பின்னர் முடிவேதும் எடுக்கப்படாத நிலையில் முடிவடைந்தது.

அண்மையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் செயலர் ஜயரத்ன சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடனேயே பேச்சுக்கள் நடைபெற வேண்டும் எனவும் பொ.ஐ.முன்னணியால் எதுவும் செய்ய முடியாது எனவும் தெரிவித்திருந்தார். இதனையடுத்தே இக்கூட்டம் நடைபெற்றது.

எனினும் கடைசியாக ஜே.வி.பி. சனாதிபதியுடன் பேச்சு நடத்திய வேளை சமாதான முயற்சிகளிலிருந்து நோர்வேயை அகற்றுமாறு வலியுறுத்திய போது சனாதிபதி ஆதரவுக்கருத்தைத் தெரிவிக்காது மௌனம் சாதித்தார் என்றும் இது ஜே.வி.பி.க்கு விசனத்தை ஏற்படுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் தான் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கூட்டணி அமைப்பது தொடர்பான கூட்டம் முடிவேதும் எடுக்கப்படாது முடிவடைந்துள்ளது.

கடந்த புதனன்று நடைபெற்ற இப் பேச்சுக்களின் போது ஜே.வி.பி. செயலர் டில்வின் சில்வா,சிறில.சு.க. செயலாளர் மைத்திரி பால சிறி சேன ஜே.வி.பி.யின் பிரச்சார செயலர் விமல் வீரவன்ச, அரசியல் பிரிவு உறுப்பினர் அனுராகுமார திசாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். புனரமைப்புப் பணிக்கு பாதுகாப்பு வலயம் இடையூறு

## -யாழ். மாவட்ட பி. செயலர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காவின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன திடீர்விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டுக்குச் சென்றுள்ளார்.

யாழ்குடாநாட்டின் புனரமைப்பு தொடர்பாக பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடுவதே இவரின் திடீர் விஜயத்துக்குக் காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்டுவரும் குடாநாட்டின் புனரமைப்புப்பணிகளில் முதல் கட்டம் நிறைவடைந்துள்ளது என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்தடுத்த கட்டங்களை துரிதகதியில் முன்னெடுப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள், அரச அதிகாரிகள், யு.என்.எச்.சி.ஆர். வதிவிடப் பிரதிநிதி ஆகியோரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

காலை 9.00மணிக்கு யாழ் மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் தமிழவனை ஆனைப்பந்தியில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய அமைச்சர் நண்பகல் அளவில் யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்தில் வதிவிட பிரதிநிதி நீல்றைட், யாழ்.மாவட்ட அரச அதிபர் பத்மநாதன், திட்டமிடல் பணிப்பாளர் சுந்தரம்பிள்ளை, பிரதேச செயலர்கள் ஆகியோரையும் சந்தித்து உரையாடியுள்ளார்.

இச்சந்திப்பில் ராணுவத்தினரால் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயம் புனரமைப்புப் பணிக்கு இடையூறாக இருப்பதாகப் பிரதேச செயலர்கள் தெரிவித்துள்ளனர்.

# மக்களை சொந்த இடங்களுக்கு அனுப்பி பேசாலை அகதிமுகாமை மூட அரச அதிபர் முடிவு

(மன்னார்)

பேசாலை அகதிமுகாம்களில் உள்ளவர்களை சொந்த இடமான கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களுக்கு தொகுதி தொகுதியாக அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மன்னார் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெகுவிரைவில் பேசாலை அகதிமுகாம் மூடப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை இவ் அகதிமுகாமை அகற்றக்கோரி மாபெரும் ஊர்வலம் இடம்பெற்றமையைத் தொடர்ந்து. இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இம் முகாமில் தற்போது 500 குடும்பங்களைச் சேர்ந்த 2056 பேர் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிசாருக்குத் தகவல் கொடுக்க பொதுமக்கள் தயக்கம்

## - சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(கொழும்பு)

குற்றச்செயல்கள் அதிகரிக்கப்படுவதற்கு மக்கள் பொலிசாருக்குத் தகவல்களை வழங்கத் தயங்குவதும் காரணமாக அமையலாம் என கொழும்பு குற்றத்தடுப்புப்பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

சில அதிகாரிகள் மீதிருக்கும் சந்தேகம் காரணமாக மக்கள் குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றிய தகவல்களை வழங்கத் தயங்குவதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

# பரத நாட்டிய அரங்கேற்றம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் பரதநாட்டிய அரங்கேற்றம் இடம் பெறவுள்ளது.

மேற்படி மன்ற நடன ஆசிரியை செல்வி சிவப்பிரகாசம் சிவகுமாரி அவர்களின் மாணவிகளான சுப்பிரமணியம் சுதர்சினி, சிவபாதம் பாகேஸ்வரி ஆகியோரின் பரத நாட்டிய அரங்கேற்றம் நாளை பிற்பகல் 07மணிக்கு அழகியல் கலாமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (பா)

# காக்கைதீவு மீனவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடி

(யாழ்ப்பாணம்)

காக்கை தீவுக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

கடந்தபுதன்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது;

காக்கை தீவுப் பகுதியைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் அப்பகுதிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அப்பகுதியில் படகுகளில் வந்த கடற்படைச் சிப்பாய்கள் குறிப்பிட்ட இளைஞர்களின் படகில் இறங்கி மீன்பிடி அடையாள அட்டையைக கேட்டதுடன், படகினுள் இருந்த பொருட்களையும் கிண்டிக்கிளறி படகினுள் ஆயுதம் உள்ளதா? என்று வினாவியதுடன் தமது இந்தக் கெடுபிடி தொடர்பாக யாரிடமும் முறைப்பாடு செய்யக் கூடாது என்றும் பயமுறுத்தியுள்ளனர். இதனால் பயமடைந்த இரண்டு இளைஞரும் உடனடியாகக் கரைக்குத் திரும்பியுள்ளதாகவும தெரியவருகிறது. (33)

# கிளி.மாவட்ட கிரிக்கெட் சங்கம் நேற்றுமுன்தினம் அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட கிரிக் கெட் சங்க அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் மாலை கிளிநொச்சி பொது விளையாட்டு மைதான செயலக வளாகத்தில் நடைபெற்றது.

கிளி.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கன[illegible]ஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் வன்னி மாவட்ட விளையாட்டு துறைபொறுப்பாளர் ராஜா, தமிழீழ விளையாட்டுகுழு தலைவர் பத்மநாதன், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், கழக அங்கத்தவர்கள். ஆகியோர் கலந்துகொண்டனர்.

இறுதியாக நிர்வாக அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது.

# வவு. பொங்குதமிழ் நிகழ்வின் நோக்கம் குறித்து படையினர், பொலிசாருக்கு ஏற்பாட்டுக்குழு விளக்கம்

வவுனியாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வின் நோக்கம் குறித்து பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினரால் பாதுகாப்புப் படையினருக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது.

அதன் முதற்கட்டமாக இன்று வியாழக்கிழமை வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் வைத்து விளக்கமளிக்கவுள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் க.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

அடுத்தகட்டமாக இராணுவத்தின் உயர் அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்படும் எனவும் அவர் சொன்னார்.

# ஜேர்மனித் தூதுவர் அம்பாறைக்கு விஜயம்

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைக்கான தூதுவர் நேற்று முன்தினம் புதன்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் வாழும் இனங்களுக்கு இடையே நிலவுகின்ற உறவுநிலை தொடர்பாகவும் அரசியல் பாதுகாப்பு பொருளாதாரநிலை, மக்களின் வாழ்க்கை நிலை என்பன தொடர்பாகவும் அவர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

# ஜனகபண்டார தென்னக்கோன் பிணையில் விடுதலை

(கொழும்பு)

மாத்தளை மாவட்ட பொது சன ஐக்கிய முன்னணி பாராளு மன்ற உறுப்பினர் ஜனகபண்டார தென்னக்கோன் நேற்று ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஒன்பதாம் திகதி தம்புள்ள நீதிமன்றில் சமுகமளிக்குமாறும் உடல்நிலை சரியில்லாத விடத்து நீதிமன்றுக்கு சமுகமளிக்க முடியாமை யின் அது பற்றி முன்கூட்டி அறிவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்ட பொ.ஐ.முன்னணி பாராளுமன்ற உறுப்பினரான ஜனக பண்டார தென்னக்கோன் அண்மையில் தம்புள்ளையில் நடைபெற்ற ஐ.தே.க.வினரின் கூட்டத்தின் போது ஐ.தே.க. ஆதரவாளர்களை தாக்கியது. தொடர்பாக நீதிமன்றத்தால் பிடிவிராந்து மூலம் கைதுசெய்ய உத்தரவிடப்பட்டிருந்தார். பின்னர் அவர் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு தம்புள்ள மாவட்ட நீதிபதி உத்தர விட்டிருந்தமை தெரிந்ததே.

# மட்டு.சத்துருக்கொண்டானில் பயணிகள் படையினரால் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் விசேட அதிரடிப்படையினர் நேற்று போக்குவரத்தில் ஈடுபட்ட பயணிகளை சோதனையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பிலிருந்து செல்பவர்களையும் சத்துருக்கொண்டானூடாக மட்டக் களப்புக்கு வருபவர்களையும் இவர்கள் சத்துருக்கொண்டான் சந்தியில் வைத்து சோதனையிட்டுள்ளனர்.

வாகனங்களில் வருகின்ற பயணிகளை இறக்கி சோதனையிட்ட பின்னரே செல்ல அனுமதித்தனர். இதனால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பிரயாணிகள் தெரிவித்துள்ளனர்.

# நிர்வாகிகள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

இந்து சமய அபிவிருத்திச் சபை நிர்வாகசபைக் கூட்டம் மாவட்ட செயலக மண்டபத்தில் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப் பெற்றுள்ளனர்.

தலைவர் (பதவிவழியாக) தி.இராசநாயகம் (கிளி. அரச அதிபர்) துணைத் தலைவர் த.கணேசு செயலர் திருமதி. மே.இந்திரகுமார். துணைச் செயலர் திருமதி. செ.சோமசேகரம்பிள்ளை, பொருளாளர் செ.செல்வரட்ணம்

மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக செ.செல்வரட்ணம், சி.நவரட்ணராசா, சி.செல்வராசா, ச.பாலசிங்கம், நா.தயாபரராசா ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்றனர். (சோ)

# எட்டுப் போராளிகளுக்கு 11ஆம் திகதி வரை விளக்கமறியல்

மட்டக்களப்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த எட்டு விடுதலைப்புலி உறுப்பினர்களையும் அடுத்த மாதம் 11ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நீதிவான் முன்னிலையில் இவர்கள் நிறுத்தப்பட்டபோது அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

கைக்குண்டு மற்றும் துப்பாக்கி ரவைகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இவர்கள் மட்டக்களப்பு கல்லடி பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து கடந்த மாதம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## - கொழும்புத்துறையில் தொழிலாளர் கவலை

# படையினரின் கெடுபிடியால் தும்புத்தொழில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை பகுதி தும்புத் தொழிலாளர்கள் மீது கடற்படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளால் அப்பகுதி தொழி லாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகத் தெரியவருகின்றது.

பெரும்பாண்மையாக தும்புக் கைத்தொழிலில் ஈடுபடும் கொழும்புத்துறை கடற்கரைப் பகுதி மக்கள் கடற்கரையில் தும்பினை பதனிடுவதற்கு தேங்காய் உரிமட்டைகளை கடற்கரையில் புதைத்து எடுத்து வருவது வழக்கம்.

இவ்வாறு பதனிடுவதற்காக புதைக்கப்படும் உரிமட்டைகளை அண்மைக்காலமாக கிண்டிக் கிளறி சோதனை செய்வதோடு அவர்களை பயமுறுத்தியும் வருகின்றனர்.

இதனால் இத்தொழிலை நம்பியுள்ள மக்கள் அச்சமடைந்துள்ளனர். தொழிலும் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

# தென்மராட்சிக்கு மின்சாரம்

தென்மராட்சியில் பகுதி பகுதியாக மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது. கைதடி, மட்டுவில், சாவகச்சேரி, அரசடிச்சந்தி, மீசாலை, கொடிகாமம் ஆகிய இடங்களுக்கு முதலில் மின்சாரம் வழங்கும் நடவடிக்கையில் மின்சார சபையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சட்டம், ஒழுங்கை அமுல்படுத்தும் அதிகாரம் இடைக்கால நிர்வாக சபைக்கு வழங்கக்கூடாது

## - அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கு சட்டம் ஒழுங்கை அமுல்படுத்துவதற்கான அதிகாரத்தை வழங்குவதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அலரி மாளிகையில் நடத்திய சந்திப்பில் கிழக்கு மாகாணத்தின் நிலவரம் குறித்துப் பேசிய போதே இவர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் நூற்றுக் கணக்கான முஸ்லிம்களை விடுதலைப்புலிகள் கொலை செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தபோது தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் இது போன்று நூற்றுக் கணக்கான தமிழ்களும், முஸ்லிம்களினால் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த ஒன்றரை வருடங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு முஸ்லிம்களுக்கு ஏதும் கிடைக்கவில்லை என்று அமைச்சர் நூர்தின் மசூர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிலளித்த சிவாஜிலிங்கம் 55 வருடங்களாக தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

# யாழ். சிறைக் கைதிகள் தொற்றுக்காய்ச்சலால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கிடையே வேகமான காய்ச்சல் நோய் தொற்று ஏற்பட்டிருப்பதாக சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

திடீரென ஏற்பட்டுள்ள இத்தொற்றுநோய் காய்ச்சல் காரணமாக பெருமளவிலான கைதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக அண்மைக் காலமாக இலங்கைக் கடற் பரப்பினுள் அத்து மீறி மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டு சுமார் 37 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் ஏற்கனவே இக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் மூலமே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய 237 கைதிகளுக்கும் இக்காய்ச்சல் நோய் தொற்றியிருக்கலாம் என சிறைச்சாலை அதிகாரிகள் நம்புகின்றனர். (27)

# பொருளாதாரத்தை சீர்குலைக்க ஜே.வி.பி. திட்டம் புலனாய்வுத்துறையினர் அரசிற்கு எச்சரிக்கை

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணி ஜே. வி.பி.யினர் நாடு பூராவும் ஆர்ப்பாட்டங்களையும் வேலை நிறுத்தப் போராட்டங்களையும் நடத்துவதற்கும் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்கவும் திட்டமிட்டு வருவதாக அரச புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இதற்கு பொதுசன ஐக்கிய முன்னணியினரும் ஆதரவளிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதன் ஒரு அங்கமாகவே பிறிமா மா ஆலை ஊழியரும் சுகாதாரப் பிரிவு ஊழியரும் நடத்தி வரும் தற்போதைய வேலை நிறுத்தப் போராட்டம் எனவும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

இதனையடுத்து ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு குழுவொன்றை அமைத்து ஆய்வு நடத்துவதென எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய அரசாங்க, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் குழு ஒன்றையும் அமைத்துள்ளது எனினும் புலனாய்வுத்துறையினரின் இக்குற்றச்சாட்டினை ஜே.வி.பி.யினர் முற்றாக மறுத்துள்ளனர்.

# கூட்டுறவுத் துறையில் ஊழல் உடன் நடவடிக்கை எடுக்குக!

## - ரணிலுக்கு சனாதிபதி கடிதம்

(கொழும்பு)

கூட்டுறவுத்துறையில் பெருமளவு ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறும்கோரி சிறிலங்கா சனாதிபதி பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் சனாதிபதி பல்வேறு விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளதுடன் கூட்டுறவுத்துறையில் இடம்பெற்ற ஊழல்களின் பட்டியலையும் இணைத்துள்ளார்.

இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து தனக்கு அறிவிக்குமாறும் சனாதிபதி தனது கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மைதானம் அமைக்கும் வேலை ஆரம்பம்

முல்லை. மாவட்டத்திற்கான பொதுமைதான வேலைகளை முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆரம்பித்து வைத்தார்.

9ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட இம்மைதான ஆரம்ப வேலைக்கான நிதியினை வன்னிப்புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது. (20)

# அளம்பில் பகுதி மக்களுக்கு விவசாயப்பயிற்சி வகுப்பு

கடந்த 22.08.2003 வெள்ளிக்கிழமை அன்றும் 23.08.2003 சனிக்கிழமை ஆகிய இருநாட்களும் அளம்பில் பகுதி மக்களுக்கான விவசாயத்தை மேம்படுத்தும் நோக்குடனான பயிற்சி வகுப்பு அளம்பில் றோ.க. வித்தியாலயத்தில் நடைபெற்றது.

விவசாயப் பணிப்பாளர் தர்மலிங்கம் தலைமையில் ஆரம்மான நிகழ்வில் சுமார் 50க்கும் மேற்பட்ட பெரியவர்கள் இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

நிறைவுநாள் அன்று பயிற்சியில் கலந்து கொணடவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பெரும ஆர்வத்துடன் மக்கள் கலந்து கொணடமை குறிப்பிடத்தக்கது. (20)

# நாடாளுமன்ற நடப்புக்கள் அறிய புதிய இணையத் தளம்

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்டர் 'நெற்', 'ஈ-மெயில்' வசதிகள் செய்து கொடுக்கப்படுமென சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கடந்த புதன்கிழமை கூறியுள்ளார். பொதுநலவாய நாடாளுமன்றச் சங்க ஆசியப் பிராந்திய மாநாடு தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், நாடாளுமன்றம் தொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளவென புதிய இணையத்தளம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதில் நாடாளுமன்ற நடப்புகளை அறிந்து கொள்ளலாம்.

நாடாளுமன்ற நிகழ்வுகளை பொதுமக்களும் அறிந்துகொள்ள வேண்டும். இதனால், நாடாளுமன்ற அமர்வுகளை நேரடியாக தொலைக்காட்சியில் ஒளிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கான அங்கீகாரம் கிடைத்ததும் ஒளிபரப்பு ஆரம்பமாகும். நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் வசதிக்காக 'சைபர்கபே' ஒன்றும் ஆரம்பிக்கப்படுமென அவர் மேலும் கூறியுள்ளார்.

# மன்னார்-புத்தளம் பாதையைத் திறக்கும் முயற்சிக்கு வெகுசன அமைப்புக்கள் கண்டனம்

(மன்னார்)

மன்னார்-மறிச்சுக்கட்டி ஊடான புத்தளம்- கொழும்பு பாதையினை திறக்க மன்னார் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூருக்கு இவர்கள் அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நாட்டு சூழ்நிலையில் இந்தப்பாதை திறப்பு பொருத்தமற்றது என கருதுகின்றோம். நிரந்தர சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படும்வரை இந்த முயற்சி நிறுத்தப்படவேண்டும் என்பது எமது தீர்க்கமான முடிவு.

1980ஆம் ஆண்டு இந்தப் பாதை திறக்க முயற்சிகள் எடுக்கப்பட்டபோது அதனை நாங்கள் தடுத்து நிறுத்தியிருந்தோம். அப்போது இருந்ததை விட மிக மோசமாகியிருக்கும் இன்றைய சூழ்நிலையில் இந்தப்பாதை பாவனைக்கு விடப்பட்டால் மிக மோசமான பின்விளைவுகளைத் தோற்றுவிக்கும். எனவே இந்த முயற்சியைக் கைவிடுமாறு மிகவும் வினயமாகக் கேட்டுநிற்கின்றோம். மாறாக நீங்கள் இம்முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டால் மாவட்டம் தழுவிய அளவில் எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வோம் என்பதனைத் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு மன்னார் மாவட்ட வெகுசன ஒன்றியத்தின் தலைவர் ஆர்.எ.ஜீவரட்ணம், உப தலைவர் தே.பி.சித்தாந்துரை ஆகியோர் ஒப்பமிட்டு அனுப்பியமகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மகஜரில் பிரதிநிதிகள் மன்னார் ஆயர், மன்னார் அரசதிபர், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் போன்றோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையினை மீளத்திறப்பதற்கு வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் மும்முரமாக ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


# சாவு அறிவித்தல்

## தம்பு சிவவடிவேல்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சிவவடிவேல் 24.08.2003 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு சடைச்சி அவர்களின் அன்பு மகனும் சின்னத்தம்பி பாக்கியம அவர்களின் அன்பு மருமகனும், சரோஜாதேவியின் அன்புக்கணவரும் சுகந்தி, ஜெகரூபன் (கனடா), ஜெகந்தீ சுதர்ஸனன் (சுவிஸ்), காந்தரூபன் (கிளிநொச்சி), தமயந்தி, காண்டீபன், நிஷாந்தி (சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசீகரன், காசீம், ஜெயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காரிஸ், ஜதீன், வேணுஜா, தனுஷ்ராஜ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.08.2003 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முகவரி
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை,
சாவகச்சேரி. (3683)

தகவல்
காந்தன் (மகன்)



# கேள்வி அறிவித்தல்

கச்சேரிக்கட்டடம் A நிர்மாணித்தலுக்கான கேள்வி அறிவித்தல் ICTAD தரம் M7 இலுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கோரப்படுகின்றது. கேள்வி கோருனர் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 500 உம் மீளளிப்பு வைப்புப் பணமாக 7700உம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவுக் கச்சேரியிலுள்ள புனர்வாழ்வுக் கிளையில் 02.09.2003 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு முன்பெற்றுக்கொள்ளலாம்.

2. பூர்ணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களை 09.09.2003 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடலாம்.

3. கேள்விகள் 09.09.2003 ஆம் திகதி அன்றைய தினமே பி.ப.3.00. மணிக்கு திறக்கப்படும். இக்கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி கோரியோரோ அல்லது கேள்விகோரியோரின் எழுத்துமூலமான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

திருமதி.இமெல்டா சுகுமார்,
மாவட்ட கேள்விச்சபைத் தலைவர்,
அரசாங்க அதிபர்.
முல்லைத்தீவு.

(சி.7784)



## சிந்தனைக்கு

பேரினவாதச் சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுதுதான், தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத்தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்து கொள்வார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 30-08-2003

## சமாதான முயற்சிகளுக்கு 'நெருக்கடி

விடுதலைப்புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த தமது யோசனைகளை முன்வைக்கத் தயாராகி வரும் வேளையில், சிறிலங்கா எதிர்க்கட்சிகளும், பௌத்த–சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களும் இடைக்கால நிர்வாகத்திற்கு எதிராகத் தமது நடவடிக்கைகளைத் தீவிரமாக்கி வருகின்றன.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் எதிர்க் கட்சித் தரப்பில் இருந்து ஒரு தரப்பினர் ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிக் கொண்டாலும், அனைவருமே மனத்தளவில் அரசியல் தீர்விற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டவர்களாகவே உள்ளனர். இதில், எதிர்க்கட்சிக்குள் கொள்கை வேறுபாடுகளோ கருத்து வேறுபாடுகளோ இருப்பதாக இல்லை.

ஆனால், இவ் எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றும், இவ் எதிர்ப்பிற்கான வழி முறையை ஒரே மாதிரியாக வெளிப்படுத்தாமல் தமது அரசியல் நலன்கள், அரசியல் எதிர்காலம் என்பனவற்றிற்கு ஏற்றவகையிலும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவகையிலும் வெளிப்படுத்தி வருபவையாகவுள்ளன. ஆனால், வழிமுறை எவ்வாறானதாக இருப்பினும், அவர்களின் நோக்கங்கள் வெற்றி கண்டு வருகின்றன என்றே கூறலாம்.

பிரதான எதிர்க்கட்சியான பொ.ஐ. முன்னணி இடைக்கால நிர்வாகத்திற்கும் சரி, சமாதானப் பேச்சுவார்த்தைக்கும் சரி எதிரான நிலைப்பாட்டையே கொண்டதாக இருப்பினும் அவற்றிற்கு எதிரான போராட்டங்களை முன்னின்று நடாத்துவதில் சில இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டிய நிலையிலேயே உள்ளது. அதாவது வெளியில் இறங்கிப் போராட்டம் நடத்துவதானது அதற்கு சர்வதேச ரீதியில் அதற்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தத்தக்கதாகவுள்ளது.

இந்நிலையில், பிரதான எதிர்க்கட்சி இவற்றிற்கான எதிர்ப்பினைப் பேச்சளவிலும், பௌத்த சிங்கள அடிப்படைவாத அமைப்புக்களைத் தூண்டிவிடும் வகையிலும் தனது நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது. இந்த வகையில், அண்மையில் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான அரசாங்கத்தினதும், புலிகளினதும் பேச்சுவார்த்தை முடிவுகளை தான் ஏற்கப் போவதில்லை என்ற சனாதிபதியின் அறிவிப்பும் வடக்கு–கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பது தொடர்பாக சனாதிபதி சிந்தித்து வருகின்றார் என்ற சனாதிபதியின் பேச்சாளரின் கூற்றுக்களும் சுட்டிக்காட்டத் தக்கவையாகும்.

இவற்றின் மூலம் சனாதிபதி சந்திரிகா இடைக்கால நிர்வாக சபைக்கு எதிரான நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளமை மட்டுமல்ல, வடக்கு–கிழக்கு இணைப்பு தொடர்பான நெருக்கடிகளையும் தோற்றுவித்துள்ளார் எனலாம். சுருக்கமாகக் கூறுவதானால், இன்று வடக்கு–கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப் படவேண்டும் என பௌத்த–சிங்கள அடிப்படைவாதக் கட்சிகள் போராட்டம் நடத்தும் அளவிற்கு சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளார்.

சனாதிபதியின் எதிர்ப்பு நடவடிக்கைகள் இவ்வாறானதாக இருக்கையில், ஜே.வி.பி.யின் எதிர் நடவடிக்கைகளோ நேரடியாக மக்கள் மத்தியில் இறங்கிக் கிளர்ச்சியைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. அதாவது, ஜே.வி.பி. மேற்கொண்ட பாத யாத்திரையும், இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரான பிரச்சாரமும் இன்று அரசாங்கத்திற்குச் சவால்விடும் ஒன்றாகியுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை விடுதலைப்புலிகளுக்கு வழங்கப்படுவதானது இலங்கை இரண்டாகப் பிரிவதற்கும் நாடு பல சிக்கல்களை எதிர்நோக்குவதற்கும் வழி வகுக்கும் என்ற வகையில் ஜே.வி.பி. மேற்கொண்ட பிரச்சாரமானது சிங்களவர்கள் மத்தியில் இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரானதொரு அபிப்பிராயத்தை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றி பெற்றுள்ளது என்றே கூறமுடியும்.

சிங்களக் கட்சிகளின் இடைக்கால நிர்வாக சபைக்கெதிரான நிலைப்பாடு இவ்வாறானதாக இருக்கையில், முஸ்லிம் அரசியல் கட்சிகள் சிலவும் இடைக்கால நிர்வாக சபைக்கும், வடக்கு–கிழக்கு இணைப்பிற்கு எதிராகவும் வெளிப்படையாகப் பேசத் தொடங்கியுள்ளன. குறிப்பாக எதிர்க்கட்சி வரிசையில் உள்ள பேரியல் அஷ்ரப் தலைமையிலான (நு.ஆ) குழுவினரும் வடக்கு–கிழக்கு இணைப்பிற்கு எதிராகப் பேசத் தொடங்கியுள்ளனர். இதேசமயம், அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இவ்விடயத்தில் அரசாங்கத்தை 'பிளைக்மெயில்' செய்யும் பாணியிலேயே நடந்துகொண்டு வருகின்றது.

இந்த வகையில், இடைக்கால நிர்வாக சபை தொடர்பான விவகாரத்திற்கு எதிரான செயற்பாடுகளில் எதிர்க்கட்சிகள் பல வழிகளில் முனைப்பாகச் செயற்பட்டு வருகின்றன. ஆகையினால், இவ்விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சந்திக்கப் போகும் நெருக்கடியானது தனியாக இடைக்கால நிர்வாக சபைக்கு மட்டுமானதாக இருக்கமாட்டாது. சமாதான முயற்சிகளுக்கும் எதிரானதே ஆகும். ஆகையினால், இதில் ரணில் விக்கிரமசிங்க தோல்வி காண்பாரேயானால் சமாதான முயற்சியிலும் அவர் தோல்வி அடைவது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# "தமிழ் இன உயிர்க் கொலை நாள்" மட்டு.இல் அனுஷ்டிக்க ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மக்கள் பெருமன்றத்தின் ஏற்பாட்டில் அடுத்த மாதம் 05ஆம் திகதி "தமிழ் இன உயிர்க் கொலை நாள்" அனுஷ்டிக்கப்படவுள்ளது.

போரின் போது படுகொலை செய்யப்பட்டவர்களை நினைவு கூரும் வகையில் மேற்படி திகதியில் இந்த "தமிழின உயிர்க் கொலை நாள்" பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வுகளுக்கு பொது மக்கள் மற்றும் நிறுவனங்கள் பூரண ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு தசாப்த காலத்தில் சிறிலங்காப் படைகளாலும் ஊர்காவல் படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகள் தமிழர் என்ற காரணத்தினாலே படுகொலை செய்யப்பட்டனர் என மட்டக்களப்பு மாவட்ட பெருமன்றம் விடுத்த செய்திக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் செப்ரெம்பர் 05ஆம் திகதி 158 தமிழ் அகதிகளும் 09ஆம் திகதி சத்துருக்கொண்டான் பிள்ளையாரடி, சிறிவஞ்சியந்தியடிக் கிராமங்களைச் சேர்ந்த 184 பொது மக்களும் 23ஆம் திகதி கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் மேலும் 16 பொதுமக்களும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இப்படுகொலைகள் உட்பட மட்டக்களப்பு மாவட்டத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் உறவுகளை நினைவு கூரும் வகையாக இந்த தமிழ் இனப்படுகொலை நாள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தினத்தில் இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் மணி ஒலி எழுப்பப்பட்டு காலை 7.00 மணிக்கு விசேட பூசைகளும் நடைபெறவுள்ளன. சகல களியாட்ட நிகழ்ச்சிகளையும் தவிர்த்து கிராமங்களிலும் முக்கிய சந்திகளிலும் சோக இசை ஒலி பரப்பப்படுவதுடன் பொதுக் கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், வீடுகள், வாகனங்கள், வீதிகளிலும் கறுப்பு கொடிகளும் பறக்க விடப்படவுள்ளன. பாடசாலைகளில் அன்றையதினம் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

# ஈழத்தமிழர் இந்தியாவை பூரணமாக வெறுக்கமுன் தமிழருக்காதரவான நிலைப்பாட்டை இந். எடுக்கும்

### - கூட்டமைப்பு பா.உறுப்பினர் சிவாஜிலிங்கம் நம்பிக்கை

(கொழும்பு)

ஈழத் தமிழர்கள் பூரணமாக இந்தியாவை வெறுப்பதற்கு முன்னர் மிகவிரைவில் இந்தியா தமிழர்களுக்கு ஆதவான நிலைப்பாட்டை எடுக்குமென்று தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அவர் இதனைக் கூறியுள்ளார். இங்கு கேள்வியொன்றிற்கு பதிலளித்த அப்பாத்துரை வினாயகமூர்த்தி கூட்டமைப்பினருக்கு இந்தியா விசா வழங்காவிட்டால் இந்தியா செல்வதைத் தாம் தவிர்த்துக் கொள்வோம் என்றும் அவர் தெரிவித்தார் சனாதிபதியின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியாவிற்கு சென்று திரும்பியுள்ளதைக் கண்டித்த அவர் இந்தியாவின் நலன் குறித்து பேசுவதற்கு அவருக்கு என்ன உரிமை உண்டு? என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

# நல்லூர் திருவிழாவிற்குச் சென்ற சுண்டிக்குளம் வாசியைக் காணவில்லை

### - உறவினர் ம.உ. ஆணைக்குழுவிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)

சுண்டிக்குளத்தை வசிப்பிடமாகக் கொண்ட சடாச்சரம் சுரேஸ் (வயது-22) எனும் இளைஞன் யாழ்ப்பாணத்தில் காணாமல் போயுள்ளார்.

வரணியில் தனது பெரிய தந்தையின் வீட்டிற்குச் சென்று அங்கிருந்து நல்லூர் தீர்த்தத் திருவிழாவிற்குச் சென்ற இவர் பெரிய தந்தையின் வீட்டிற்கு இதுவரையும் திரும்பி வரவில்லை. இது தொடர்பாக அவரது பெரிய தந்தை நேற்று மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார். (33)

# சிறிலங்காப் பிரதமர் ரணில் அடுத்த மாதம் அமெ.பயணம்

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத இறுதியில் அமெரிக்காவிற்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னதாக அடுத்த மாத முற்பகுதியில் பிரதமர் மலேசியாவிற்குச் சென்று அங்கு இருதரப்பு வர்த்தகமுதலீட்டு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

# தடையை எதிர்த்து அஸார் செய்த மனு கைதராபாத் நீதிமன்றால் தள்ளுபடி

### - தடை தொடருமென்றும் அறிவிப்பு

கிரிக்கெட் போட்டிகளில் விளையாட விதிக்கப்பட்ட ஆயுட்காலத் தடையை எதிர்த்து மொஹமட் அஸாருதீன் தாக்கல் செய்த மனுவை ஹைதராபாத் நீதிமன்றமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்துள்ளது.

ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டு காரணமாக 2000ஆம் ஆண்டில் இந்திய அணியின் முன்னாள் தலைவரான மொஹமட் அஸாருதீன் மனோஜ் பிரபாகர் அஜய்ஜடேஜா உட்பட ஐவருக்கு தடை விதிக்கப்பட்டது. தங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்த்து ஜடேஜா, அஸாருதீன் இருவரும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர். இதில் ஜடேஜாவுக்கு உள்ளூர் போட்டிகளில் மட்டும் விளையாட டில்லி நீதிமன்றம் சமீபத்தில் அனுமதி அளித்திருந்தது.

இந்நிலையில் கடந்த 2000ஆம் ஆண்டு ஹைதராபாத் மாவட்ட நீதிமன்றில் அஸார் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் நடைபெற்றது. அப்போது அஸாரின் மனுவை இரண்டாவது கூடுதல் தலைமை நீதிபதி தாசராமையா தள்ளுபடி செய்ததாக இந்திய கிரிக்கெட் சபையின் சட்டத்தரணி தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அஸார் மீது விதிக்கப்பட்ட ஆயுட்கால தடை அப்படியே நீடிப்பதாக குறிப்பிட்ட இவர் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி இனி மனுதாரர்தான் முடிவு செய்ய வேண்டுமென்றார்.

அஸாருதீன் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கூறுகையில், தீர்ப்பின் நகல் எங்களுக்குஇன்னும் கிடைக்கவில்லை. எந்த அடிப்படையில் மனுதள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை அறிந்த பின்னரே கருத்து தெரிவிக்க முடியும் என கூறியுள்ளார்.

# இறுதிப்போட்டிக்கு இந். வீராங்கனை தெரிவு

பாரிசில் நடைபெற்றுவரும் உலக தடகள சம்பியன் போட்டிகளில் நேற்று முன்தினம் நீளம் பாய்தல் பிரிவில் இந்திய வீராங்கனை அஞ்சு ஜாங் 6.78 மீற்றருக்கு பாய்ந்து இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.




### - 3ஆவது ஆசிய நீச்சல் போட்டியில் -

# இரு தங்கப்பதக்கங்களை இலங்கை வீரர் வென்றார்

3ஆவது ஆசிய நீச்சல் சாம்பியன் ஷிப் போட்டிகளில் இலங்கை வீரர் கொன்ராட் பிரான்ஸிஸ் இரு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.

சீனாவின் மெக்காவ் தீவில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. இப் போட்டிகளில் கடந்த ஞாயிறன்று 100 மீற்றர் போட்டியில் கொன்ராட் பிரான்ஸிஸ் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். திங்களன்று நடந்த 50 மீற்றர் பட்டர்ச பிளை போட்டியிலும் இவர் தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இலங்கை வீரர் ஒருவர் நீச்சல் துறையில் பெற்ற மிகச்சிறந்த பெறுபேறு இதுவாகும்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கும் 22 வயதான பிரான்ஸிஸ் ஏற்கனவே தகுதிபெற்றுள்ளார். இன்று அவர் தாயகம் திரும்பும்போது அவருக்கு விமரிசையான வரவேற்பு அளிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளது. ஆசிய சாம்பியன்ஷிப் போட்டிகளில் இலங்கையின் சார்பில் 10 பேர் பங்குபற்றுகின்றனர். இவர்களில் தாரகிசியகுனா, டைவிங் போட்டியொன்றில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

## புலிகளுக்கு...

அரசியல் சட்ட உரிமைகள் மையம் என்ற அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் இந்த வழக்கில் அரசுக்கு எதிராகவாதாட இருக்கின்றனர்.தேசப்பற்று சட்டத்தினால் பொது மனித உரிமைகள், சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டு வருவதாக ஏற்கனவே பல வழக்குகள் தாக்கலாகிய நிலையில் அந்த வழக்குகளுடன் சேர்க்குமாறு கோரி இந்த புதிய வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இதற்கான மனுவை தமிழ் அமைப்புகளும் அரசியல் சட்ட உரிமை வழக்கறிஞர்களும் அமெரிக்காவில் தாக்கல் செய்தனர்.

இதில் விடுதலைப்புலிகள் இயக்கமும், குர்திஷ்தான் தொழிலாளர் கட்சியும் தங்கள் மக்களின் பறிக்கப்பட்ட உரிமைகளைத் திரும்பப்பெறப் போராடி வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவர்களுக்கு சட்ட ரீதியிலும் மனிதாபிமான ரீதியிலும் உதவி செய்ய முழு உரிமையும் உண்டு எனவும் இதனை தேசப்பற்று சட்டத்தின் மூலம் ஒடுக்க நினைப்பது மனிதாபிமான விரோத செயல் எனவும் அதில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## இளைஞனை..

எனவும் எச்சரித்துள்ளதாகவும் தெரிவித்தார். இதனால் தனது தம்பியின்மனநிலைஉட்பட உடல் ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக மேற்படி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (33)

## குடியிருப்புக்களில்..

கிரமிக்கப்பட்டிருந்தது.

எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் இம் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேற வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டபோதிலும் சுமார் 650க்கும் அதிகமான வீடுகளில் படையினர் தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளனர்.

இந்நிலையில் தென்மராட்சியின் மந்துவில் பகுதியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது குடியிருப்புக்களைவிடுவிக்கக்கோரி அப்பகுதி பொதுமக்கள் கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்கொன்றை தாக்கல் செய்யமுற்பட்டுள்ளனர்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் உதவியுடன் மனிதஉரிமைகள் அபிவிருத்திக்கான நிலையம் ஊடாக இவ் வழக்கு தாக்கல் செய்ய ஏற்பாடாகியுள்ளது. (27)

## பின்லாந்து...

தெரிவித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இப்போதுள்ள போர்நிறுத்த ஒப் பந்தம் புலிகளுக்கு முற்று முழுதாக சாதகமாக உள்ளதாகத் தெரிவித்துள்ள ஜே.வி.பி. அதனை எவ்வாறு மாற்றி அமைப்பது என்பது குறித்தும் இன்றைய மத்திய குழுக்கூட்டத்தில் ஆராயவுள்ளதாக தெரியவருகிறது.(32)

## அமைச்சர்களின்..

மாதம் சமர்ப்பிக்கவுள்ள வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிக்க எஸ்.பி.திசாநாயக்க சில நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் அமைச்சர்களுக்கு ஜெயசூரிய தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பொதுசன ஐக்கிய முன்னணியினருடன் பேச்சுக்களை நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (32)

## பாதுகாப்பு..

காப்பு அமைச்சுக்கு காணி உரிமையாளர்கள் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருந்தனர்.

இதற்கு அமைவாக அங்கு குடியமர அனுமதிப்பதாக பதில் கடிதமும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. ஆனால் அங்கு அவர்கள் குடியமரச் சென்ற போது படையினர் அக் காணியை முற்றுமுழுதாக குடியேற அனுமதிக்க முடியாது என்றும் அந்த காணியின் ஒரு பகுதியில் தாம் இருப்பதாகவும் ஏனைய பகுதியில் காணியின் உரிமையாளர்கள் வசிக்க வேண்டும் எனவும்நிர்ப்பந்தித்துள்ளனர். (33)

## சிறிலங்கா....

யப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது அனைத்து மக்கள் மத்தியிலும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. என்பது உண்மையான விடயம்.

ஆகவே, சிங்கள அரசு தான் கொடுத்த வரைவுக்கு பதில் வரைவாக இதனை எதிர்பார்த்தாலும் எங்கள் தமிழ் மக்களின் இடைக்கால நிர்வாகம் எவ்வாறு இருக்க வேண்டும். அவர்களது அபிலாசைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம். ஆகவேஅதற்கானஒரு வரைவாகத் தான் இது தற்பொழுது இடம்பெற்று இருக்கின்றது.

இதன் சிறப்பம்சம் உலகத்தில் இருக்கின்ற எமது புத்திஜீவிகள் அனைவரும் ஒன்றுகூடி இந்த வரைவை இன்று தயாரித்துள்ளனர். இது ஒரு மிகவும் பலம் வாய்ந்த விடயமாகத்தான் இருக்கின்றது. எனவே இதை சிங்கள அரசு எழுந்த மானத்தில் தூக்கிஎறிந்துவிட முடியாது.

ஏனென்றால், இதில் ஈடுபட்டவர் கள் யார் யார் என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். அவ் வாறு அவர்கள் தூக்கி ஏறிவர்களாக இருந்தால் சர்வதேச உலகம் சிங்கள அரசின் இனவாதப் போக்கை இதிலிருந்து புரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பும் ஏற்படும் என்றார்.

இத்திட்ட வரைவு மூன்று விடயங்களை உள்ளடக்கி எழுதப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கேணல் கருணா அவர்கள்,

தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தியாக்கக் கூடிய வகையில் இது அமைந்திருக்க வேண்டும்.

சர்வதேச உலகம் ஏற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் இது இருக்க வேண்டும். இவ்வரைவை சிங்கள அரசு ஏற்றுக் கொள்ளலாம். ஏற்றுக்கொள்ளாது விடலாம். அது அவர்களைப் பொறுத்தது எனவும் கேணல் கருணா அவர்கள் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளால் வரையப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகம் சிறிலங்கா அரசால் நிராகரிக்கப்பட்டால் ஏற்படும் விளைவுகள் பற்றி கேட்ட போது,

எதைக் கேட்டாலும் அவர்கள் தருவதற்கு தயாராக இல்லை. இதனை கட்டம் கட்டமாக நீங்கள் அறிவீர்கள். அதாவது, வடக்கு-கிழக்கைக் கட்டியெழுப்புவதற்காக அமைக்கப்பட்ட சிரான் அமைப்பை தூக்கி எறிந்துவிட்டது சிறிலங்கா அரசு.அடுத்தது இடைக்கால நிர்வாகத்தை கேட்டோம். இதனையும் தூக்கி எறிந்தால் வருகின்ற விளைவென்பது கடினமாகவே இருக்கும்.

அதாவது, அதன் அழுத்தத்தை உணர்ந்து கொள்வார்கள் என்பது எதுவித ஐயமும் இல்லை. ஆகவே இவ்விடத்தில் நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்தத் தீர்வு தூக்கி எறியப்பட்டு மீண்டும் ஒரு யுத்தம் வந்தால் அதன் கொடுமைகளை, தாக்கங்களை சிங்கள மக்கள் நேரடியாகவே அனுபவிக்கப்போகின்றார்கள்.

ஆகவே, அந்த தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்காக அவர்கள் இதில் விழிப்பாக இருந்து சிங்கள அரசுத் தலைவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுத்து நாங்கள் எதிர்பார்க்கின்ற தீர்வுகளை தருவதற்கான வழிகளை அவர்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று நான் சிங்கள மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன் என்றார்.

## காணி....

நியாயபூர்வமானதும், சமாதானத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ச்சிக்கும் இன்றியமையாததுமான வரைவே இது என்பதை சர்வதேசம் புரிந்து கொள்ளுர் என்று நம்புகிறோம். இது தட்டிக்கழிக்கப்பட முடியாதது என்றும் நம்புகிறோம்.

☐ அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை வரைவிற்கும் அரசாங்கத்திடம் முன்வைப்பதற்காக இப்பொழுது விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்டிருக்கும் வரைவிற்கும் இடையிலான பிரதான வேறுபாடுகள் என்ன?

இது பற்றி இப்பொழுது எதுவும் வெளியிடுவதற்கு இல்லை நாம் தயாரித்துள்ள இந்த வரைவை எமது தலைமைப்பீடத்திடம் சமர்ப்பித்து கலந்துரையாட வேண்டியிருக்கின்றது. அதன் பின்பே இதை ஒரு ஆலோசனை வரைவாக அரசாங்கத்திடம் முன்வைக்கவுள்ளோம்.

☐ அரசாங்கம் சமர்ப்பித்த வரைவில் இருந்து இப்பொழுது புதிய வரைவிற்கான அரசியல் மற்றும் சட்ட வல்லுநர்களால் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் அதிகம் வலியுறுத்தப்பட்ட விடயம் என்ன?

காணி தொடர்பான அதிகாரமும் மற்றும் சட்டம் ஒழுங்கைப் பேணுவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் ஆன அதிகாரங்கள் அவசியமானதென அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அவ்வாறு அமையாதது அர்த்தபூர்வமான ஒரு சபையாக அது செயற்படுவதற்கு வாய்ப்பளிக்காது என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

☐ அடுத்த கட்டப் பேச்சு விரைவில் ஆரம்பிக்கப்படுமா? எங்கு, எப்போது அது நடைபெறும் வாய்ப்புள்ளது?

அது பற்றி உடனடியாக சொல்வதற்கில்லை. இந்த ஆலோசனை வரைவை அரசிடம் முன்வைத்து அரசின் பதிலுக்காக நாம் காத்திருக்க வேண்டியுள்ளது.

☐ ஐரோப்பிய நாடொன்றில் இந்த வரைவு குறித்து மீண்டும் ஒரு கலந்துரையாடல் நடைபெறும் என்று செய்திகள் வெளியாகினவே?

அது பற்றியல்ல. சமாதானம் பற்றி ஒரு கருத்தரங்கொன்று பிரிட்டிஷ், அயர்லாந்தில் நடத்துவதற்கு நோர்வே தரப்பு அனுசரணையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த வரைவு சமர்ப்பித்ததன் பின் அது நடைபெறும் வாய்ப்புள்ளது.

☐ சுவிஸிற்கு தாங்கள் செல்வதற்கான நோக்கம் என்னவாக இருக்கிறது?

சுவிஸ்நாட்டு வெளிவிவகாரத்துறை அமைச்சும் மற்றும் நிதி அமைச்சு அதிகாரிகளும் எம்முடன் சமாதானம் குறித்து கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்திருக்கின்றனர். அதை ஏற்றே இந்தப் பயணம் அமைகிறது.

☐ நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் உங்களைச் சந்தித்தபோது குரங்குபாஞ்சான் விடயம் தொடர்பாக கண்காணிப்புக் குழு இப்பொழுது முன்வைத்திருக்கும் ஆலோசனை பற்றி ஏதாவது கதைக்கப்பட்டதா?

அது குறித்தும் கதைக்கப் பட்டிருந்தது. குரங்குபாஞ்சான் விடயம் பற்றி நாம் ஏற்கனவே எமது நிலைப்பாட்டை ஆழமாகத் தெளிவுபடுத்தியிருந்தோம். இப்பொழுது கண்காணிப்புக் குழு முன்வைத்துள்ள ஆலோசனை பற்றி எமது தலைமைப் பீடத்துடன் கலந்துரையாடிய பின்பே ஒரு பதிலினைத் தர முடியும் என்றும் அவர்களுக்கு விளக்கியுள்ளோம்.


# சாவு அறிவித்தல்



## சின்னத்தம்பி ஆறுமுகம்

புதுக்குடியிருப்பு உம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்கள் 29.08.2003 அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தெய்வானை ஆகியோரின் அன்பு மகனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பார்வதி காலஞ்சென்ற நாகமணி தம்பையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசேந்திரம், கனகேஸ்வரி, அன்னலட்சுமி, விமலேந்திரம், காலஞ்சென்ற மகேந்திரம் பாலேந்திரன் (லண்டன்) கனகேந்திரராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிகிரிகைகள் 30.08.2003. சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக பி.ப 2.00 மணியளவில் புது.இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
பாலேந்திரன், கனகேந்திரராசா
(லண்டன்) (லண்டன்)

(3684)



# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளல் - 2003

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளளிப்புக் கீழ்வரும் அட்டவணைக்கமைவாக உதவி அரசாங்க அதிபர் பிரிவு வாரியாக நடைபெறும்

**1) யாழ். மாவட்டம்.**

இடம் : முகமாலைநுழைவாயிலருகே அமைக்கப்பட்டுள்ள கூடம்.

நேரம் : காலை 8. 00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை

**16-09-2003 (செவ்வாய்)**
நல்லூர்
யாழ்ப்பாணம்
கோப்பாய்
உடுவில்

**17-09-2003 (புதன்)**
மானிப்பாய்
தெல்லிப்பளை
சங்கானை
காரைநகர்
வேலணை
பச்சிலைப்பள்ளி

**18-09-2003 (வியாழன்)**
கரவெட்டி
பருத்தித்துறை
வடமராட்சி கிழக்கு
சாவகச்சேரி

**2) வன்னி**

**20-09-2003 (சனி)**

பூநகரி நல்லூர் மகாவித்தியாலயம்-நல்லூர்-பூநகரி — காலை 08.30 மணி
முழங்காவில் மகாவித்தியாலயம்-முழங்காவில் — மு.ப. 09.45 மணி
விடத்தல்தீவு றோ.க. பாடசாலை-விடத்தல்தீவு — மு.ப. 11.00 மணி
கறுக்காய்க்குளம் அ.த.க. பாடசாலை-கறுக்காய்க்குளம் — ந.ப. 12.00 மணி
மல்லாவி மத்திய கல்லூரி-மல்லாவி — பி.ப. 03.30 மணி
அக்கராயன் மகாவித்தியாலயம்-அக்கராயன் — மாலை 05.00 மணி

**21-09-2003 (ஞாயிறு)**

மாங்குளம் மகாவித்தியாலயம்-மாங்குளம் — காலை 08.00 மணி
வருவாய்ப் பகுதிச் செயலகம்-புளியங்குளம் — காலை 08.30 மணி
நெடுங்கேணி மகாவித்தியாலயம்-நெடுங்கேணி — மு.ப. 09.30 மணி
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்-ஒட்டுசுட்டான் — மு.ப. 10.15 மணி
வித்தியானந்தாக் கல்லூரி-தண்ணீரூற்று — மு.ப. 11.30 மணி
ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம்-புதுக்குடியிருப்பு — பி.ப. 12.15 மணி
விசுவமடு மகாவித்தியாலயம்-விசுவமடு — பி.ப. 01.30 மணி
கிளி. மத்திய கல்லூரி-கிளிநொச்சி — பி.ப. 02.45 மணி



# கூணிணிக் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

தமிழீழ மாணவர் அமைப்பு

பிரிவு i * MS Office
க.பொ.த சாதாரணதரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்(பல்கலைக்கழகபுகுமுகமாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

பிரிவு ii *கிராபிக் டிசைனிங் (Graphic Designing)டெஸ்க் ரொப் பப்ளிசிங்(Desktop Publishing)கணினித்துறையில்ஓரளவுஅனுபவமுள்ள சகலரும் விண்ணப்பிக்கலாம்.

01.09.2003 திங்கள் காலை 9.00மணிக்கு சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்துடனும், சகல ஆவணங்களுடனும் நேரில் சமுகம் தரவும்.

**தமிழீழ மாணவர் அமைப்பு**
**நடுவப்பணியகம்,**
**பரவிப்பாஞ்சான்,**
**கிளிநொச்சி.**

(3682)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.